மாண்புமிகு திரு· ஏ. கோவிந்தசாமி : தூத்துக்குடியில் ஆர். ஆர். ஆறுமுகசாமி நாடார் என்பவர் 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை விவசாயக் கல்லூரிக்கு வழங்குவதற்குத் தாயராக இருப்பதாக மாவட்டக் கலெக்டர் மூலமாகத் தகவல் கொடுத்திருக்கிருர்கள். அந்தத் தொகை போதாத காரணத்தால்தான் இதைச் செய்ய முடியாது. 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் தருகிறேன், "ஆறுமுகசாமி நாடார் கல்லூரி" என்று பெயர் வைத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிருர்கள். இன்னும் கூடுதலாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம். பட்டா நிலத்தைத்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று அல்ல, புறம்போக்கு நிலத்தைச் சதுரமாகக் காண்பித்தால்கூட ஏற்றுக்கொள்ளலாம்.

மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

* 533 வினு—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு உணவு—வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவு பால் யூனியனையும் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், யூனியனில் வேலை பார்க்கும் சிப்பந்திகளையும் பால் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் உத்தரவு ஏதேனும் அனுப்பிய துண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : மதுரை நகரில் பால் வாங்குபவர்களுக்குப் பால் வழங்குவதற்காக மதுரை பால் பாது காப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியதன் விளைவாக, மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. இந்தச் சங்கம் சேகரிக்கும் பாலை மதுரை பால் பாதுகாப்புப் பண்ணையிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், பாது காப்பு நிலையத்திடம் ஒப்படைப்பதற்காகப் பாலை உற்பத்தி செய்வதையும் சேகரிப்பதையுமே இது மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டது. அதற்கிணங்கக் கூட்டுறவுச் சங்கம் பால் வழங் கும் பணியைக் கைவிட்டது. இதற்கெனச் சங்கம் நியமித்திருந்த பணி யாளர்களை ஆட்குறைப்புச் செய்ய வேண்டியதாயிற்று. சங்கம் ஆட்குறைப்புச் செய்த 54 பணியாளர்களில் 46 பேர் மதுரை பால்பண்ணையிலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். சங்கத்தின் எழுத்தர் பணியாளர் களாகிய எட்டுப் பேருக்கும் மதுரை பால் பண்ணையில் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகுதியிராததால், அவர்களைப் பணியிலமர்த் திக் கொள்ளவில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவுப் பால் பண்ணை இணைக்கப்பட்ட பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களுக்கும்—அவர்கள் வேலை இல்லாது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால்—மீண்டும் பரிசீலனைசெய்து சாத்தமங்கலம் பால் திட்டத்திலேயே ஏதேனும் வேலை கொடுத்துப் பாதுகாக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களும், போதுமான தகுதி (குவாலிஃபிகேஷன்) இல்லாத காரணத்திஞல் தான் நீக்கப்பட்டார்கள். அவர்களுடைய படிப்புக்குத் தகுந்த வேலை வேண்டுமென்ருல் அரசாங்கம் யோசிக்கும்.

Town Planning Officers.

* 534 *Q.*—**Thiru S. RAMACHANDRAN** : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the stage at which the proposal of provincialisation of the services of Municipal Town Planning Officers stands ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இச்செயற் குறிப்பு ஆலோசனையில் உள்ளது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநில அளவிலே ஒரு சர்வீஸிலே அவர்களைக் கொண்டுவருவதற்கான செயற் குறிப்பு ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அதன் மீது விரைவிலே முடிவெடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதிலே இரண்டு வழி முறைகளை இன்றைக்கு அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டு வருகிறது. ஒன்று, நகராட்சி மன்றங்களின் அதிகாரிகளில் அல்லது பணியாளர்களில் ஒரு வகையினரை, தமிழ்நாடு நகராட்சிப் பணியினராக அறிவிப்பு மூலம் அமைப்பதற்கு அரசு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 77–ஏ பிரிவு வகைசெய்கிறது. நகராட்சி மன்றங்கள் அனைத்தையும் கலந்தாலோசித்த பிறகும், அவ்வாறு கலந் தாலோசிக்கப்பட்ட மன்றங்களில் பெரும்பாலானவை அத்தகைய கருத்தை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றிய பிறகுமே அதை ஏற்றுக் கொள்ளலாம் என்பது ஒரு கருத்து.

இரண்டாவது, தமிழ் நாட்டிற்காக (அரசு) சிவில் பணி ஒன்றை ஏற் படுத்துவதாகும். இதற்குச் சட்டம் இயற்றுவது அவசியமாகும். இந்தச் சிவில் பணிக்கு நகராட்சி மன்றங்களில் எந்த ஒரு வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளை அல்லது பணியாளர்களை அறிவிப்புமூலம் ஏற்றுக்கொள்ள லாம் என்று 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதாவின் 102-ம் பிரிவின்படி ஒரு விதி இருக்கிறது. அந்த விதி இப்பொழுது காலங் கடந்ததாகிவிட்ட காரணத்தால் மீண்டும் அந்த விதியின் அடிப்படையில் ஒரு சிவில் பணியில் அவர்களை வைத்துக்கொள்ளலாமா, அதற்கு யார் யாரை,எந்த எந்த வகையிலே ஏற்றுக்கொள்வது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறது. அதில் எதைச் செய்ய முடியுமோ, அதைச் செய்யும். எவ்வளவு விரைவிலே முடியுமோ அவ்வளவு விரை விலே முடியும்.

அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி.

*535 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுச்சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை, அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி யில் பணியாற்றும் மருத்துவர்கள் எந்தெந்தத் தகுதியின் அடிப்படையில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர் ?

(இ) எத்தனை ஆசிரியர்கள் இக்கல்லூரியில் பணியாற்றுகின்றனர் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரியின் சித்த முறையில் எச். பி. ஐ.எம். (H.P.I.M)., ஜி.ஸி.ஐ.எம், (G.C.I.M.) எல். ஐ. எம். (L.I.M.) பட்டம் பெற்றவர்களும், சித்த முறையில் பதிவு செய்யப்பட்ட பரம்பரை வைத்தியர்களும் (R.I.M.P.) ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எச். பி. ஐ. எம். (H.P.I.M.) ஜி.ஸி. ஐ. எம். (G.C.I.M.) பட்டதாரிகள் முதல் நிலை விரிவுரையாளர்களாகவும், எல்.ஐ.எம். (L.I.M.) பட்டதாரிகள் இரண்டாம் நிலை விரிவுரையாளர்களாகவும் ஆர்.ஐ. எம்.பி. (R.I.M.P.) போன்றவர்கள் உதவி விரிவுரையாளர்களாகவும் மருத்துவ அதிகாரி களாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

(இ) 12.